©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 330] CHENNAI, TUESDAY, JULY 28, 2026
Aadi 12, Parabhava, Thiruvalluvar Aandu–2057

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் அறிவிக்கை**

**தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், களப்பாகுளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.வே.சிவசங்கரி என்பவரை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(11)-ன் கீழ் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

**No. VI(2)/34(a)/2026.**

*(Letter No. COLRD/3224/2022-A6)*

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம், களப்பாகுளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.வே.சிவசங்கரி என்பவர் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து தனது கடமையை செய்யத் தவறியதாலும் மற்றும் அரசு / ஊராட்சிக்கு ரூ.3333720/– (ரூபாய் முப்பத்து மூன்று இலட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளது ஊர்ஜிதம் ஆவதால், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(11)—ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர், அவரின் மீதான குற்றச்சாட்டுக்கள் அதற்கான விளக்கங்கள் களப்பாகுளம் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் ஆகியவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும், ஆழ்ந்தும் பரிசீலனை செய்ததில் இவர் ஊராட்சி செயல் அலுவலர்/ஊராட்சி மன்றத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிரூபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(11)—ன் கீழ் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இவரை களப்பாகுளம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழ்*** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்காசி,
28 ஜூலை 2026.

ரஞ்ஜீத் சிங்,
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

Ex-VI-2—(330)